

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா ஊராட்சி ஒன்றியம் லாலாபேட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் நடந்த "உங்களுடன் ஸ்டாலின்" முகாமை பார்வையிட்டு மனுக்கள் மீது உடனடி தீர்வு காணப்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ஜே.யு.சந்திரகலா, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் சேஷாவெங்கட ரமணன், துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன், ஊராட்சி மன்ற தலைவர் முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




திண்டுக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் கழகத் துணை பொதுச்செயலாளர் அமைச்சர் இ. பெரியசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் அமைச்சரும், மேற்கு மாவட்ட செயலாளருமான அர.சக்கரபாணி கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ செந்தில்குமார் எம்.எல்.ஏ., வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# விஜய் தாமதமாக வந்ததே 41 பேரின் உயிரிழப்புக்கு காரணம்!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலர் எம்.ஏ.பேபி பேட்டி!

**கரூர், அக்.5-**

**கரூர் பிரச்சாரத்துக்கு த.வெ.க. தலைவர் விஜய் காலதாமதமாக வந்ததே 41 பேரின் உயிரிழப்புக்கு காரணம் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் எம்.ஏ. பேபி தெரிவித்தார்.**

கரூர் வேலுச்சாமிபுரத்தில் விஜய் பிரச்சாரக் கூட்ட நெரிசல் ஏற்பட்ட இடத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலர் எம்.ஏ.பேபி தலைமையில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர்கள் ராதாகிருஷ்ணன், சிவதாசன், திண்டுக்கல் மக்களவை உறுப்பினர் சச்சிதானந்தம், கட்சியின் தலைமைக் குழு உறுப்பினர் வாசுகி, நாகை சட்டப்பேரவை உறுப்பினர் நாகை மாலிக், மாநில குழு உறுப்பினர் பாலா உள்ளிட்டோர் வெள்ளிக்கிழமை பார்வையிட்டனர். தொடர்ந்து அப்பகுதியினரிடம் சம்பவம் குறித்துக் கேட்டறிந்தனர். பிறகு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினர்.



பின்னர் செய்தியாளர்களிடம் எம்.ஏ.பேபி கூறியதாவது:-

விஜய் பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த சந்திரா என்பவரது மகன் சக்திவேல் கல்லூரி படிப்பை பாதியில் நிறுத்தியுள்ளார். அவரது படிப்பைத் தொடரவும், அவரது கல்விச்செலவை ஏற்கவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடவடிக்கை எடுக்கும். சம்பவம் குறித்து விசாரிக்க அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. அவரது விசாரணை நம்பகத்தன்மை கொண்டதாக இருக்கும்.

இச்சம்பவத்தில் அரசின் துரித நடவடிக்கையால்தான் ஏராளமானோர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

த.வெ.க. ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தை முறையாக ஏற்பாடு செய்யவில்லை. விஜய் 7 மணி நேரம் காலதாமதமாக வந்துள்ளார். அதுவே உயிரிழப்புகளுக்கு காரணமாக அமைந்துள்ளது.

இனி இதுபோன்ற சம்பவம் நடக்காமல் இருக்க நீதித் துறை, விசாரணை ஆணையம், அரசியல் கட்சிகள் என அனைவரும் ஒன்று சேர்ந்து பொதுவான விதி முறையை வகுக்க வேண்டும். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்கவேண்டும். போலீஸார் தனிப்படை அமைத்து விசாரணை நடத்தி வரும் நிலையில் சி.பி.ஐ. விசாரிக்கத் தேவையில்லை என்றார் அவர்.

---

### கரூர் துயரசம்பவம்:

# உயர்நீதிமன்றம் சரியாகத்தான் சொல்லி இருக்கிறது !

## திருச்சியில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

*திருச்சி, அக்.5-*

திருச்சி சோமரசம்பேட்டையில் 30 லட்சம் மதிப்பீட்டில் சித்த மருத்துவ கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என் நேரு பங்கேற்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் சரவணன், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் பழனியாண்டி உள்ளிட்ட சித்த மருத்துவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமைச்சர் கே.என்.நேரு கூறுகையில்.

ஏற்கனவே செயல்பட்டுக்கொண்டிருந்த சித்த மருத்துவமனை 30 லட்சம் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்வதற்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.



கரூர் சம்பவத்திற்கு தி.மு.க.தான் பொறுப்பேற்க வேண்டும் என எடப்பாடிகூறியது என்ற கேள்விக்கு, அவர் வேறு என்ன சொல்ல முடியும் செய்ய முடியும், நேற்று முதலமைச்சர் கூறியதை கேட்டீர்களா? தமிழகத்தில் பல்வேறு பிரச்சினைகள் நடைபெற்று வருகிறது, வெள்ளம்வந்தது அதற்கு கூட பணம் வழங்கவில்லை அப்போதுகூட வராத பா.ஜ.க. எம்.பி.க்கள்குழு உடனடியாக இந்த நிகழ்வுக்கு வருவதற்கு காரணம் என்ன என்றும் முதல்வர் கேள்வி எழுப்பியுள்ளார் அதுமட்டுமின்றி, பா.ஜ.க. கூட்டணியில் அ.தி.மு.க. வும் இருப்பதால் அது போன்றுதான் பேசுவார், மக்கள் தெளிவாக இருக்கிறார்கள் மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள் நீதி மன்றத்தில் கூறியதுதான் உண்மை நிலைமை.

கரூர் துயரசம்பவம் குறித்து உயர்நீதிமன்றம் சரியாகத்தான் சொல்லி இருக்கிறது விஜய் நேரில் வந்து பார்க்கவில்லை என பத்திரிகை மற்றும் ஊடகங்கள் கூறுகிறது.

விஜய் கூட்டத்திற்கு அனுமதி வாங்கியவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள்மீது வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது, நீதிமன்றம் அக்கட்சி பற்றி கூறி வருகிற நிலையில் அவர்களை (விஜய்யை) பார்த்து நாங்கள் ஏன் பயப்படவேண்டும், பயந்து நாங்கள் என்ன செய்யப் போகிறோம்? எதுவந்தாலும் நாங்கள் சந்திப்போம் என்றார்.



இராமநாதபுரத்தில் நேற்று (04.10.2025) . கைத்தறி, துணிநூல் துறையின் மூலம் மாநில அளவிலான கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி முதல் விற்பனையை துவக்கி வைத்து, கண்காட்சியை துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை அரசு செயலாளர் வே. அமுதவல்லி கைத்தறித்துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் , ,பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் இராம.கருமாணிக்கம், நகர் மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம் ஆகியோர் உள்ளனர்.

### கரூர் சம்பவம்

# மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவு!

## சென்னை உயர்நீதிமன்றம் கருத்து!

*சென்னை, அக்.5-*

கரூரில் த.வெ.க. கூட்டத்தில் 41 பேர் பலியானது மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவு என்று சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.



கரூரில், த.வெ.க. தலைவர் விஜய் பிரச்சார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி, 41 பேர் பலியாகியுள்ள நிலையில், அரசியல் கட்சிகளின் ரோட் ஷோக்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்க வேண்டும் என்றும், அதுவரை எந்தக் கட்சிகளுக்கும் ரோட் ஷோக்களுக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் சென்னை வில்லிவாக்கத்தைச் சேர்ந்த பி.ஹெச்.தினேஷ் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு, நீதிபதி என்.செந்தில்குமார் முன் விசாரணைக்கு வந்தபோது, தமிழ்நாடு அரசுத்தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன், வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கும் வரை எந்த கட்சிக்கும் பேரணி செல்ல அனுமதி வழங்கப்படாது என உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பாக பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, த.வெ.க. கரூர் மாவட்ட செயலாளர் மதியழகன், நகர செயலாளர் பவுன்ராஜ் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், துணைப்பொதுச் செயலாளர் நிர்மல்குமார் ஆகியோர் மீதும் வழக்குப்பதிவு செய்துள்ளதாகவும், அவர்கள் இருவரும் முன் ஜாமீன் கோரியுள்ளனர் என்றும், புலன் விசாரணை நடந்து வருகிறது எனவும் காவல் துறை தரப்பில் ஆஜரான தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா விளக்கமளித்தார்.

இதையடுத்து நீதிபதி செந்தில் குமார், இந்தச் சம்பவத்தில் பலியானவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டார்.

பின்னர், வீடியோக்களை பார்க்கும் போது வேதனை அளிக்கிறது எனக் குறிப்பிட்ட நீதிபதி செந்தில் குமார், 2 பேர் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். வேறு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அனைத் தையும் அனுமதித்துள்ளீர்களா? என அதிருப்தி தெரிவித்தார்.

காவல் துறை கண்மூடிக் கொண்டிருக்க முடியாது. முதல்வர், எதிர்க்கட்சி தலைவர் என அனைவரும் சம்பவ இடம் சென்றுள்ளனர் எனத் தெரிவித்த நீதிபதி, நடிகர் விஜய் பயணித்த பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக வீடியோக்கள் வெளியாகியுள்ளன எனச் சுட்டிக்காட்டி னார்.

மேலும் பல்வேறு கேள்விகளை நீதிபதி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர், த.வெ.க. கேட்ட இடத்தை தான் ஒதுக்கினோம். 11 நிபந்தனை கள் விதிக்கப்பட்டன. இரு நிபந்தனைகள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டன. மீதமுள்ள நிபந்தனைகள் மீறப்பட்டன. எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அதே இடத்தில் பிரச்சாரம் செய்துள்ளார். த.வெ.க நிகழ்ச்சிக்கு 559 போலீசார் பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்பட்டனர். அரசு மீது குறை கூறுவது எளிது. டிசம்பர் மாதம் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி திடீரென செப்டம்பருக்கு மாற்றப்பட்டுள்ளது என விளக்கம் அளித்தார்.

கரூரில் நடந்த சம்பவம், மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவு. நீதிமன்றம் இதை கண்மூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கஇருக்க முடியாது. பொறுப்பை தட்டி கழிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

பின்னர், பெண்கள், குழந்தைகள் பலியான நிலையில், கட்சி தொண்டர்களை, ரசிகர்களை பொறுப்பற்ற முறையில் கைவிட்டு விட்டு ஓடிய, த.வெ.க. தலைவர் விஜய் உள்ளிட்ட நிர்வாகிகளுக்கு தலைமைப் பண்பு இல்லை. சம்பவத்துக்கு பொறுப் பேற்கவும் இல்லை என கண்டனம் தெரிவித்தனர் நீதிபதிகள்.

**ஜாமீன் மனு நிராகரிப்பு!**

இந்நிலையில், உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தவெக நிர்வாகிகள் புஸ்ஸி ஆனந்த் மற்றும் சிடிஆர் நிர்மல் குமார் முன்ஜாமின் மனு மீதான விசாரணை நடைபெற்று வருகிறது.

அப்போது, புஸ்ஸி ஆனந்த், சிடிஆர் நிர்மல்குமார் ஆகியோர் முன் ஜாமீன் கோரிய மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.



மதுரை வடக்கு மாவட்டம் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி தேர்தல் குறித்த ஆலோசனைக் கூட்டம் சோழவந்தானில் நடைபெற்றதில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி, தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. ஆகியோர் பல்வேறு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினர். உடன் ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ, எம்.ஆர். எம்.பாலசுப்பிரமணியன், சுப.த.சம்பத், புதூர் சேகர், நேரு பாண்டியன், தன்ராஜ், முத்தையன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.